செலவில் முடிக்கப்பட்டது. இந்த நேர்ப்பாடு நஞ்சை மற்றும் நகராட்சி பரப்பில் செல்வதால் புறச்சாலைக்கு ஏற்ற நேர்ப்பாடு இல்லையென்ற காரணத்தால் மாற்று நேர்ப்பாடு (Alt rnative alignm:nt) அமைக்கப்பட்டது. மாற்று நேர்ப்பாட்டிற்குத் தேவையான நிலத்தை மாநில அரசு ஆர்ஜிதம் செய்து மத்திய அரசிடம் திருநெல்வேலி புறச்சாலை அமைக்க ஒப்படைக்கவும், முந்திய நேர்ப்பாட்டில் ஆர்ஜிதம் செய்த நிலத்தை மாநில அரசு எடுத்துக் கொள்ளவும் மத்திய அரசுக்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இப்பணிக்காக ரூ. 346 இலட்சம் தேவையாக இருக்கிறது. அந்த வேலைகளை இரண்டு கட்டத்தில் எடுத்துச் செய்ய வேண்டியுள்ளது. பரிசீலனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய புறவழிச்சாலை நன்செய் நிலத்தில் வருவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்து கூறப்பட்டது. நெல்லையைப் பொறுத்த வரையில் எந்த புறவழிச்சாலைக்கு ஏற்பாடு செய்யும் போதும் நன்செய் தவிர வேறு வழியே கிடையாது. வேறு இடம் கிடையாது. இதை அரசு அறியுமா ? மாற்று நேர்ப்பாடு என்று சொல்லக்கூடிய அந்த வழித்தடம் எங்கே என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, திருநெல்வேலியைப் பொறுத்த வரையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் எந்த வழியில் நாம் போனாலும் நன்செய்யை கடந்துதான் போக வேண்டியிருக்கிறது. வேறு நிலம் கிடைக்காததால் நன்செய் நிலத்தை எடுத்தாக வேண்டும் என்ற சூழ்நிலையில் நில ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதைச் சீக்கிரம் இரண்டு கட்டங்களில் செய்ய ரூ. 346 இலட்சம் தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இது, மத்திய அரசின் திட்டம். இதில் மாநில அரசின் பங்கு இல்லை. தேசிய நெடுஞ்சாலை என்று சொன்னாலே முழுவதும் மத்திய அரசே நமக்குக் கொடுக்கிறது. ஆகவே, இரண்டு கட்டங்களாக முதலில் ரூ. 200 இலட்சம், அடுத்தாற்போல் 146 இலட்சம் ரூபாய் என்ற முறையில் ரூ. 346 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் அமுல்படுத்தப்படும் தன்னிறைவுத் திட்டம்.

252—(*வினா எண் 21275)—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டம் எத்தனை நகர சபைகளில் அமுல்படுத்தப்படும் ?

(ஆ) அதற்காகும் செலவு எவ்வளவு ?

(இ) எந்தெந்த பணிகள் எடுத்துக் கொள்ளப்படும் ?

(ஈ) இதற்காகத் தனி அலுவலர்கள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ)

1982-83 ஆம் ஆண்டில்	..	2
1983-84 ஆம் ஆண்டில்	..	6
மொத்தம்	..	8

(ஆ)

1982-83 ஆம் ஆண்டில்	..	ரூ. 50 இலட்சம்.
1983-84 ஆம் ஆண்டில்	..	ரூ. 96 இலட்சம்.
மொத்தம்	..	ரூ. 146 இலட்சம்.

(இ)

1. குடிநீர் வழங்குதல்.
2. சாலைகள் அமைத்தல்.
3. குறுக்கு பாலங்களும் மழைநீர் வடிகால்களும் அமைத்தல்.
4. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும், இடுகாடுகளுக்கும் பாதைகள் அமைத்தல்.
5. பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.
6. மருந்தகங்கள் மற்றும் தாய்-சேய் நல மையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.
7. பொதுச் சுகாதாரம் (ஆர். சி. ஏ. பி. கழிவறைகள் கட்டுதல்).
8. தெரு விளக்குகள் அமைத்தல்.
9. துப்புரவுப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தல்.

(ஈ) ஆம், வட ஆற்காடு மாவட்டத்தில் 2 தனி அலுவலர்கள் இராணிப்பேட்டை மற்றும் வாணியம்பாடி ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்டு பணியாற்றி வருகின்றனர்.

1934 மார்ச் 14]

திரு பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்ட நேரத்திற்கும், இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு பதிலளிக்கின்ற கால கட்டத்திற்கும் இடையே இந்த வேலைகள் செய்யப்பட்டு முடித்திருக்கலாம். ஆனால், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது, உதாரணத்திற்கு, திருவண்ணாமலை நகராட்சி இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். இதிலே ஊர் பெயர் சொல்லவில்லை. திருவண்ணாமலை நகராட்சியில் எந்தெந்த வேலைகள் எடுத்துக் கொள்ளப் பட்டன என்ற தகவல் உள்ளதா ? அப்படி எடுத்துக்கொள்ளப் பட்ட வேலைகளில் எந்தெந்த வேலைகள் முடிவுற்றன என்பதைப் பற்றி அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்பு கிறேன் ?

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியாக ஒவ்வொரு நகராட்சியிலும் என்னென்ன வேலைகள் எடுக்கப்பட்டன என்ற குறிப்பு இல்லை. ஆனால், நீங்கள் கேட்ட கேள்வி, வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை நகராட்சிகள் தன்னிறைவு திட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றுதான் கேட்டிருக்கிறீர்கள். ஆகவே, அதற்குரிய பதிலைக் கொடுத்திருக்கிறேன். ஆனால், திருவண்ணாமலை நகராட்சியில் என்னென்ன வேலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? அதிலே என்னென்ன வேலைகள் முடித்திருக்கின்றன என்று தனியாகக் கேள்வி கேட்டால், கண்டிப்பாக அதற்குப் பதில் சொல்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, 6 நகராட்சிகள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். எந்தெந்த நகராட்சிகள் என்று அறிவிக்க இயலுமா ? 96 இலட்சம் ரூபாய் செலவாகியிருப்பதாக அறிவித் திருக்கிறார்களே, அந்தத் தொகை எந்தெந்த வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டது ? அதிலே எந்தெந்த வேலைகள் முடிவுற்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், ஆம்பூர், ஆற்காடு, இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, ஆரணி, திருவத்திபுரம் ஆகிய 6 நகராட்சிகள் ஆகும். அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 96 இலட்சம். வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின் றன.

[1984 மார்ச் 14

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரசபைகள் என்று சொன்னால், வருவாய் குறைவாக வரக்கூடிய நகராட்சிகளும், பெரிய நகரசபைகளும் இருக்கின்றன. வருவாய் குறைவாக உள்ள நகரசபைகளுக்கு அதிக நிதி ஒதுக்க அரசு முன்னுரிமை வழங்க முன்வருமா? அந்த அடிப்படையில் திருப்பத்தூர் நகராட்சிக்கு முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் 106 நகராட்சிகள், நகரியங்கள் மொத்தமாக இருக்கின்றன. அதிலே ஏறத்தாழ 70 பலவீனமாக, பணமில்லாதவையாக இருக்கின்றன. பெரியது, சிறியது என்று பார்க்காமல் மக்கள் தொகையை கணக்கில் எடுத்துக் கொண்டு, நாம் அதன் அடிப்படையில் நிர்ணயம் செய்ய வேண்டும். ஆனால், குறிப்பாக சில நகரசபைகள் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதால், அதற்கு ஒரு விதியை வைத்து, அதன்மூலம் இன்று தன்னிறைவுத் திட்டத்தை நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறோம். 1984-85 ஆம் ஆண்டு தன்னிறைவு திட்டத்தின்கீழ் திருப்பத்தூர் நகராட்சியை தேர்ந்தெடுப்பதுக் குறித்து ஆராய்ந்து தகுந்த நிதி ஒதுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சி நகரில் ஜாதியின் பெயரில் உள்ள தெருக்கள்.

253—(*வினா எண் 22336)—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் ஜாதியின் பெயரால் தெருக்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை தெருக்கள் உள்ளன? அவை எவையெவை?

(இ) ஜாதியின் பெயரால் உள்ள பெயர்களை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 134 தெருக்கள். விவரப் பட்டியல் ** அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) தெருக்களின் பெயரோடு உள்ள சாதிப் பெயர்களை நீக்கவும் முழுமையாக சாதிப் பெயரிலுள்ள தெருக்களுக்கு புதிய பெயர் சூட்டுவது குறித்தும் தமிழ் வளர்ச்சி இயக்குநருடன் திருச்சிராப்பள்ளி நகராட்சி கலந்தாலோசித்து வருகிறது.

** 580-582ம் பக்கங்களில் இணைப்பு II ஆக வெளியிடப் பெற்றுள்ளது.